இயங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த நூலகங்கள் செயல்பட என்ன தேவை என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறார். எங்கே குறைபாடுகள் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டி அதை நிவர்த்தி செய்யவேண்டுமென்று என்னிடத்திலே குறிப்பிட்டார்கள். எனவே, அந்தக் கவலை உங்களுக்குத் தேவையில்லை. அது நிறைவேற்றப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) சென்னை புறநகர்ப் பகுதி குடியிருப்புகளின் கழிவுநீரை அடையாறு ஆற்றோரப் பகுதிகளில் கொண்டு சேர்த்தலைத் தடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள்.*

திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை புறநகர் பகுதிகளிலுள்ள குடியிருப்புகளிலிருந்து எடுக்கப்படுகின்ற கழிவுநீர், லாரிகள்மூலம் பெருங்குடியிலுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும். ஆனால், சென்னை புறநகர் பகுதிக்குட்பட்ட தாம்பரம், பம்மல், அனகாபுத்தூர், குன்றத்தூர் உள்ளிட்ட பகுதிகளிலுள்ள குடியிருப்புகளிலிருந்து எடுக்கப்படுகின்ற அந்தக் கழிவுநீரை, பெருங்குடி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்படாமல், நூற்றுக்கணக்கான லாரிகளிலே கொண்டு வந்து அடையாறு பகுதியிலுள்ள கொளப்பாக்கம், கெருகம்பாக்கம், தரப்பாக்கம், இரண்டாம் கட்டளை, கவுல்பஜார், பொழிச்சலூர், திருநீர்மலை ஆகிய ஆற்றோரப் பகுதிகளிலே ஊற்றுகிறார்கள். மேலும், பம்மல், நாகல்கேணி போன்ற பகுதிகளிலுள்ள 200–க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளிலிருக்கின்ற கழிவுநீரை சுத்திகரிப்பு செய்யாமல். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் சுருக்கமாக சொல்லி, உரையை முடியுங்கள்.*

திரு. தா.மோ. அன்பரசன்: *முடிந்துவிட்டது. மணப்பாக்கம் பகுதியிலே ஒரு* check dam *கட்டியிருக்கிறோம். கழிவுநீரை சுத்திகரிப்பு செய்யாமல், அந்த ஆற்றுப் பகுதிகளிலே விடுவதால் கிட்டத்தட்ட மொத்த கழிவுநீரும் அங்கே தேங்கி, 2, 3 கிலோ மீட்டர் தூரத்திற்கு துர்நாற்றம் வீசுவதோடு, குடிநீர் ஆதாரம் கெட்டுப்போய் இன்று பாழ்பட்டுப் போயிருக்கின்றது. அந்தக் கழிவுநீர் ஆற்றுப் பகுதிகளிலே விடப்படாமல் தடுத்து நிறுத்த*

2019 ஜூலை 18] *[திரு. தா.மோ. அன்பரசன்]*

வேண்டும். அப்படி விடப்பட்டால் அந்தக் கழிவுநீரை விடுகின்ற நபர்கள்மீது தக்க நடவடிக்கை எடுத்து, அந்த ஆற்றுப் பகுதிகளைக் காப்பாற்றிட வேண்டுமென்று தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலந்தூர் தொகுதியில் உள்ள ஆலந்தூர், ஆதம்பாக்கம், நங்கநல்லூர், பழவந்தாங்கல் மற்றும் மீனம்பாக்கம் பகுதிகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர், 24 மில்லியன் லிட்டர் உந்து திறன் கொண்ட நிலமங்கை நகர் கழிவுநீர் உந்து நிலையத்தில் பெறப்பட்டு, பெருங்குடி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்பப்படுகிறது.*

மேலும், ஆலந்தூர் தொகுதியில் அடங்கிய, ஆலந்தூர் மற்றும் ஆதம்பாக்கம் பகுதிகளிலிருந்து வரும் கழிவுநீர், ஆதம்பாக்கம் ஏரியில் கலப்பதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, சீர் செய்யப்பட்டுள்ளது.

மழைக் காலத்தில் இப்பகுதியில் கழிவுநீர் வெளியேற்றப்படுவதைத் தவிர்க்கும்பொருட்டும், இப்பகுதியில் வேகமாகப் பெருகிவரும் மக்கள்தொகை மற்றும் வணிக வளாகங்களைக் கருத்தில் கொண்டும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நிலமங்கை நகர் கழிவுநீர் உந்து நிலையத்தில் உள்ள பம்புசெட்டுகள், 57 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மாற்றியமைக்கப்பட்டு, நல்ல நிலையில் பயன்பாட்டில் உள்ளன. கூடுதலாக கழிவுநீரகற்று நிலையம் அமைப்பதற்கு போதுமான இடம் கிடைக்கப்பெறாததால், ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள நிலமங்கை நகர் கழிவுநீரகற்று நிலையத்தின் உட்பகுதியில் உள்ள காலியிடம் தேர்வு செய்யப்பட்டு, 25 கோடியே 52 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் கூடுதலாக 10 MLD *திறன் கொண்ட கழிவுநீரகற்று நிலையம் அமைக்க அம்ருத் ஊக்குவிப்பு நிதி–*special grant*–ல் பெறப்பட்டு, பணியாணை வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் அனைத்தும் டிசம்பர் 2020–ல் முடிவடையும். இப்பணிகள் நிறைவடையும்போது,*

ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள ஆதம்பாக்கம் ஏரியில் கழிவுநீர் கலப்பது முற்றிலும் தடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–25

அதேபோல், லாரிகள் மூலமாகக் கழிவுநீரைக் கொண்டுவந்து, ஆறுகளில் ஊற்றுவதாக உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். கண்டிப்பாக, அதற்குத் தனியாக ஒரு team போட்டு, முற்றிலுமாகத் தடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், விதி 110–ன்கீழ் பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறார்கள். அதில், கூவம் ஆறு, அடையாறு, பக்கிங்ஹாம் கால்வாய், இதனைச் சேர்ந்த பிரதான நீரோடையில் கழிவுநீர் கலப்பதை இடைமறித்தல், மாற்றுவழிகளை அமைத்தல், சிறிய வகை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைத்தல் மற்றும் உந்து நிலையங்கள் அமைத்தல் என்று பல்வேறு திட்டங்களின் மூலமாக, இன்றைக்கு, சென்னை குடிநீர் வடிகால் வாரியத்தின் கழிவுநீர் சுத்திகரிப்பு உட்கட்டமைப்பைப் புதுப்பிப்பதற்காக, 2,321 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவித்துள்ளார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால், கிட்டத்தட்ட 300 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பல்வேறு திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தப் பிரச்சினையை முழுமையாகத் தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய தொகுதியில் இருக்கக்கூடிய கிராமச் சாலைகள் சீரமைக்கப்படுமா என்று கவன ஈர்ப்பு அறிவிப்பிலே கொடுத்துள்ளார்கள். காஞ்சிபுரம் மாவட்டம், ஆலந்தூர் தொகுதியில் உள்ள ஊராட்சிகளான அய்யப்பன்தாங்கல், பரணிபுத்தூர், மௌலிவாக்கம், கோவூர், கொளப்பாக்கம், கெருகம்பாக்கம், பெரியபணிச்சேரி, தண்டலம், தரப்பாக்கம், இரண்டாம் கட்டளை, மூவரசம்பட்டு, கவுல்பஜார் ஆகிய 12 ஊராட்சிகளில், மொத்தம் 52 கிலோ மீட்டர் நீளத்திற்கு 87 சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

2019 ஜூலை 18] [திரு. எஸ்.பி. வேலுமணி]

மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அரசு, கடந்த 2016–2017 முதல் 31–5–2019 வரையிலான மூன்றாண்டு காலத்தில், தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், நபார்டு திட்டம், 14–வது மத்திய நிதிக் குழு மானியம், ஒன்றிய பொது நிதி உள்ளிட்ட பல்வேறு சாலைத் திட்டங்கள் வாயிலாக, இதுவரை 31 கிலோ மீட்டர் நீளமுள்ள 46 சாலைகள், 14 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தார்ச் சாலைகளாக மேம்படுத்தப்பட்டுள்ளன. மேலும், தற்போது அய்யப்பன்தாங்கல், கெருகம்பாக்கம், இரண்டாம் கட்டளை, மூவரசம்பட்டு மற்றும் கவுல்பஜார் ஆகிய ஊரகப் பகுதிகளில் 6.70 கிலோ மீட்டர் நீளமுள்ள 13 சாலைகள், 3 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட உள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) கெயில் நிறுவனம் பெட்ரோலியப் பொருட்களை கர்நாடக மாநிலத்திற்கு எடுத்துச் செல்ல, எண்ணெய்க் குழாய் பதிப்பதற்கு விளைநிலங்களைக் கையகப்படுத்துவதைத் தடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கெயில்' நிறுவனம் பல்வேறு எண்ணெய் நிறுவனங்களுக்கு பெட்ரோலியம், தாதுப்பொருட்களை எடுத்துச்செல்ல அனுமதி வழங்குகிறது. தமிழகத்திலே கோவை மாவட்டம், இருகூரிலிருந்து கோவை, திருப்பூர், ஈரோடு, சேலம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்கள் வழியாக கர்நாடக மாநிலம், தேவனகுந்தி பகுதிக்கு 'பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன்' எண்ணெய்க் குழாய் பதிப்பதற்கான முயற்சியை எடுத்து, அதற்காக நிலம் கையகப்படுத்துவதற்கு அரசு அறிவிப்பு வெளியிட்டிருக்கிறது. இந்த நிலையிலே, அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகளும், விவசாயச் சங்கங்களும் போராடுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகளினுடைய வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கின்ற வகையிலே, அரசு மாற்றுவழியைச் செய்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கர்நாடக மாநிலம், மங்களூரிலிருந்து பெங்களூரு வரை குழாய் பதிக்கின்ற பணிக்கு கர்நாடக அரசு மறுப்பு தெரிவித்திருக்கிறது. எனவே, நம்முடைய அரசும் இதைக்